ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவை முறைமையினை வலுப்படுத்தும் செயற்திட்டம் - கூறு I இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 23 ஆம் திகதிய 8878 – எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சாகவிருந்த தற்போதைய சுகாதார அமைச்சானது செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சுகாதார அமைச்சானது முன்னாள் மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டு அமைச்சாகவிருந்த தற்போதைய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்து செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. செயற்திட்டமானது பிரதானமாக கூறு I மற்றும் கூறு II ஆக பிரிக்கப்பட்டுள்ளதுடன் கூறு I மத்திய மட்டம் மற்றும் மாகாண மட்டத்தில் அமுல்படுத்தப்படுகின்றது. நாட்டின் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் உயர் ஆபத்தைக் கொண்ட சனத்தொகை குழுக்களில் உள்ள தொற்றா நோய்களை கண்டறிந்து முகாமை செய்வது தொடர்பான வலியுறுத்தலுடன் கூடிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் குறிக்கோள் ஆகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 31,588 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 200 மில்லியன் ஆகும். அதில் ரூபா 8,030.46 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொலர் 50.84 மில்லியன் செயற்திட்டத்தின் கூறு I (மத்திய மட்டம்) இற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் மொத்த கிரயம் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2019 சனவரி 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒருங்கிணைந்த செலவினங்களையும் அதன் ஒருங்கிணைந்த காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.1 ஆம் அட்டவணையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஒருங்கிணைந்த நிதி நிலைமைக் கூற்றில் பொது வைப்பாக காட்டப்பட்டுள்ள ரூபா 7 மில்லியன் மீதிக்கும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கில் உள்ள ரூபா 19 மில்லியன் மீதிக்கும் இடையே ரூபா 12 மில்லியன் வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 12 | 2022.12.31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றில் உள்ள ரூபா 7,256,423 பொது வைப்பு மீதி சரியாக உள்ளது என்பதை தங்களுக்கு தயவுடன் தொரிவித்துக் கொள்கின்றேன். கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கின் பிரகாரம் ரூபா 19,363,575 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளமை சரியானதல்ல. மேலும் ஆவணம் சீர்செய்யப்பட்டு 2022.12.31 இல் உள்ளவாறான மீதி ரூபா 7,256,423 ஆக சீர்செய்யப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மருந்து விநியோகத்திற்காக குளிரூட்டல் வசதியுடன் கூடிய இரண்டு லொறிகளின் கொள்வனவு தொடர்பாக வழங்குநர் ஒருவருக்கு ரூபா 26 மில்லியன் முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் பின்னர் லொறிகளை வழங்கத் தவறியதன் காரணமாக வழங்குநரால் முற்பணத் தொகை மீளளிக்கப்பட்டிருந்தது. எனினும், பிழையான கணக்கீடு காரணமாக, முற்பணத் தொகையானது முற்பணத்திற்குப் பதிலாக | 26 | 02 எண்ணிக்கையிலான 14 அடி சரக்கு லொறிகளிற்கான (குளிரூட்டி) கொள்வனவுக் கட்டளைகள் 2021 ஒக்தோபரில் சதொச மோட்டோர்ஸ் பில்சிக்கு வழங்கப்பட்டிருந்தன. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் விபரங்களை உறுதிப்படுத்துவதற்கு 3 ஆவணங்களை அனுப்புமாறு கோரியிருந்தார். அந்த ஆவணங்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, லொறிகள் இலங்கை துறைமுகத்திற்கு வந்தடைந்த பின்னர், கம்பனி மாதிரி விலைப்பட்டியல்களை வழங்கியது. வாகனங்களை இறக்குமதி செய்வதில் அரசாங்கம் | நிதிக்கூற்று சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மோட்டார் வாகனங்களாகக் கணக்கீடு செய்யப்பட்டு, மீளளிக்கப்பட்ட தொகை முற்பணத் தீர்ப்பனவாக பதிவு செய்யப்படுவதற்குப் பதிலாக வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இதன் விளைவாக, வருமானம் மற்றும் மோட்டார் வாகன மீதிகள் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன. | | கடுமையான கட்டுப்பாடுகளை விதித்ததன் காரணமாக, கம்பனி அனுமதியை பெற்றுக்கொள்வதற்கும், துறைமுகம் மற்றும் சுங்கத்திடமிருந்து வாகனங்களை விடுவிப்பதற்கும் சிரமங்களை எதிர்கொண்டது. சுகாதார அமைச்சு மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் அனுமதியை பெற்று விடுவிப்பதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டிருந்தன. அந்த நேரத்தில் கொவிட்-19 தடுப்பூசிகள் மற்றும் ஏனைய தடுப்பூசிகள் இந்த குளிரூட்டி லொறிகள் மூலம் கொண்டு செல்லப்பட வேண்டியிருந்தன. மேற்கூறிய அனைத்து உண்மைகளையும் கருத்தில் கொண்டு 2 லொறிகளுக்கான ரூபா 25.9 மில்லியன் காசோலையை எழுதுவதற்கும் 2021 ஆம் ஆண்டிற்கான கணக்குகளை மூடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டு PSSP இறுதிக் கணக்கிற்குத் தொகை கணக்கீடு செய்யப்பட்டது. காசோலை எழுதப்படவில்லை என்றால் ஒதுக்கப்பட்ட நிதி இரத்து செய்யப்பட்டு அரசாங்க வருமானத்திற்கு மீளளிக்கப்படும். | |
| (இ) | மத்திய மாகாணத்தில் உள்ள ஆரம்ப மருத்துவமனைகளின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் இருந்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஏனைய மருத்துவமனைகள், ஆரம்ப மருத்துவ நிலையங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் மருத்துவமனைகளின் பட்டியலிற்கு வெளியே உள்ள ஏனைய நிர்மாண நடவடிக்கைகள் தொடர்பாக 2019 சனவரி 01 முதல் 2022 திசெம்பர் 31 வரை ரூபா 270 மில்லியன் | 270 | 2021 திசெம்பர் 27 இல் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சினால் நடாத்தப்பட்ட ஆரம்ப சுகாதார முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்ட அறிக்கையின் பிரகாரம் ஆரம்ப சுகாதார முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டம் மூலம் இனங்காணப்பட்ட ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிறுவனங்களுக்கு மேலதிகமாக ஏனைய ஆரம்ப சுகாதார நிறுவனங்களும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.<br><br>அதன் பிரகாரம் நிர்மாணம் அவர்களின் தேவைப்பாடு மற்றும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ஒதுக்கீட்டைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செலவிடப்பட்டிருந்ததுடன் இது நிர்மாண செயற்திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 43 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

**(அ)**

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | காரணம் |
|---|---|---|---|---|---|
| | | எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | |
| | | சதவீதம் | சதவீதம் | | |
| 01 | உட்கட்டமைப்பு அபிவிருத்தி | 100.0 | 54.0 | பொறி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் உட்கட்டமைப்பை அபிவிருத்தி செய்து வலுப்படுத்துவதற்காக ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 114.4 மில்லியன் மாத்திரமே செலவிடப்பட்டிருந்தது. | நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்டது. |

| | |
|---|---|
| **முகாமைத்துவத்தின் பதில்** | 2022 ஆம் ஆண்டில் பொறி இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு ரூபா 250 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 89.05 மில்லியன் நி.பி. 66 இன் கீழ் ஏனைய இரண்டு செலவின விடய குறியீடுகளுக்கு மாற்றப்பட்டது, எனவே, தேறிய ஒதுக்கீடு ரூபா 160.5 மில்லியனாக இருந்ததுடன் 2022/12/31 இல் உள்ளவாறான தேறிய செலவினம் ரூபா 114.37 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் தேறிய ஒதுக்கீட்டிற்கு எதிரான தேறிய செலவினத்தின் சதவீதம் 71 சதவீதமாக இருந்தது. 2022 ஆம் ஆண்டின் பொருளாதார நெருக்கடியின் பிரகாரம் அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை மட்டங்கள் எதிர்பாராத விதமாக அதிகரித்தன, எனவே, திட்டமிடப்பட்ட சில பெறுகைகள் இரத்து செய்யப்பட்டது, இதன் விளைவாக, குறித்த சேமிப்பு ஏற்பட்டது. |
| **கணக்காய்வாளரின் பரிந்துரை** | அபிவிருத்தி உட்கட்டமைப்பு நடவடிக்கைகளை அமுல்ப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் அடைந்துகொள்ளப்பட வேண்டும். |

### 3.2 மீதி உறுதிப்படுத்தல்

| பேரேட்டுக் கணக்கு | மீதிகள்/ பேரேட்டுக் கணக்குகளின் எண்ணிக்கை | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தொகை | | தொடர்புடைய ஏட்டின் விபரம் | வேறுபாடு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | நிதிக்கூற்றின் பிரகாரம் ரூபா மில்லியன் | தொடர்புடைய ஏடுகளின் பிரகாரம் ரூபா | | ரூபா | | |
| வங்கியிலுள்ள காசு | 09 | 91 | - | உறுதிப்படுத்தல் கடிதங்கள் | - | மாகாண சபையின் பொதுவான வங்கிக் கணக்கின் ஊடாக கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே அந்தத் தொகைக்கு வங்கியில் இருந்து தனியான மீதி உறுதிப்படுத்தலைப் பெற முடியாது. | உறுதிப்படுத்தல் கடிதங்கள் நேரடியாக கணக்காய்வாளர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.3 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம், நாட்டின் தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளில் ஆரம்ப சுகாதார சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தை அதிகரிப்பதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். எனினும், செயற்திட்டமானது உண்மையான நோக்கத்தை அடைந்துகொள்ளாத பல்வேறு பணிகளுக்காக 06 சந்தர்ப்பங்களில் ரூபா 2 மில்லியன் தொகையை செலவிட்டிருந்தமை மாதிரிக் கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன் கணக்காய்விற்கு முறையான அங்கீகாரம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்ட அபிவிருத்தி நோக்கமானது முதன்மை மருத்துவச் சேவைகளை மறுசீரமைப்பதாகும், இதன் மூலம் பணவளிப்பு நோக்கங்களுக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் அடைந்துகொள்ளப்பட வேண்டியுள்ளது. செயற்திட்டமானது DLIS இன் அடைந்துகொள்ளலை உறுதிப்படுத்தியவுடன் உலக வங்கி ஒதுக்கப்பட்ட ஐ.அ.டொலரை விடுவிக்கிறது<br><br>எனினும், குறித்த பணவளிப்பு செய்யப்பட்ட நிதிகளின் முதலீட்டிற்காக தீர்மானமெடுக்கும் அதிகாரத்தை கொண்ட இலங்கையின் நிதி உடன்படிக்கையின் பிரகாரம் குறித்துரைத்த நடவடிக்கைகள் 1,2,3,4 சுகாதார அமைச்சுக்கு அத்தியாவசியமாக இருந்ததுடன் PSSP கணக்குகளில் நிதிகள் காணப்பட்டன, எனவே செயலாளர் சுகாதாரம் செலவின விடயக் குறியீடு 2509 ஏனைய செலவினங்களுக்குரிய செலவினச் செயற்பாடு 5 மற்றும் 6 ஐ அங்கீகரித்துள்ளார். (முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்). | செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் ஒத்திருக்கின்ற செயற்பாடுகள் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 திசெம்பரில் குடும்ப நலப் பாதுகாப்பு மாணவர்களுக்கான பயிற்சி படிகளாக ரூபா 68.2 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் செயற்திட்டத்திற்கான செயற்பாடு சேர்க்கப்படாதமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது, பதவியணியினர் பயிற்சிக்காக ரூபா 5 மில்லியன் மாத்திரமே ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த கொடுப்பனவால், பதவியணியினர் பயிற்சிக்கான கிரயம் ரூபா 74.4 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் ஒதுக்கீட்டை விஞ்சி ரூபா 69.4 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஆண்டின் தொடக்கத்தில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிக்கும் போது, இந்த செயற்பாடு காணப்படவில்லை அல்லது இனங்காணப்படவில்லை. எனினும் 2022 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில், 1000 குடும்ப நல பாதுகாப்பு மாணவர்கள் ஒரு அத்தியாவசிய செயற்பாடாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். மேலும் 2022 பாதீட்டில் தேவையான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காததால், சுகாதார செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில், குறித்த கொடுப்பனவுகள் கூறின் கீழ் வழங்கப்பட்டன. | செயற்திட்டத்தின் நோக்கங்களுடன் ஒத்திருக்கின்ற செலவினங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | லேடி றிட்ஜ்வே மருத்துவமனையின் வெளிப்புற நோயாளர் பிரிவை டிஜிட்டல் மயமாக்கும் "சிமார்ட் OPD" நிகழ்ச்சித்திட்டத்திற்காக 10 வியாபாரக்குறியீடு அச்சிடல் இயந்திரம், 02 லேபிள் அச்சிடல் இயந்திரம், 29 டெல் குறோம் புக் (Dell Chrome Book), 06 மேசைக் கணனி, 14 வியாபாரக் குறியீடு வாசிப்பான் ஆகியவற்றிற்காக ரூபா 5.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. பரீட்சிப்பின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | லேடி றிட்ஜ்வே மருத்துவமனையின் வெளிப்புற நோயாளர் பிரிவை டிஜிட்டல் மயமாக்கும் முதன்மை நோக்கத்துடன் HHIMS (மருத்துவமனை சுகாதார தகவல் முகாமைத்துவ முறைமை) ஏற்கனவே செயற்பாட்டில் உள்ளமையை கணக்காய்வு | லேடி றிட்ஜ்வே மருத்துவமனையில் வெளிநோயாளர்களை பதிவு செய்வதற்காக ஒரு வரிசை முகாமைத்துவ முறைமை மாத்திரமே செயற்பட்டு வந்தது. கடந்த காலங்களில் வெளி நோயாளர்களைப் பதிவு செய்வதில் இலத்திரனியல் மருத்துவப் பதிவு முறைமை செயற்படவில்லை. எனினும், மருத்துவமனையில் வார்டுகள், ஐசியூ, அவசர சிகிச்சை பிரிவு என்பவற்றிற்கான HHIMS முறைமையாக இலத்திரனியல் | புதிய முறைமையை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் தற்போதைய முறைமை மேம்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிப்படுத்தியது. வழங்கப்பட்ட சேவைகளின் தரம் மற்றும் செயற்திறனை அதிகரிப்பதற்கு இலத்திரனியல் மருத்துவ பதிவு முறைமையொன்றை நிறுவுவதே இதன் நோக்கமாகும். அதன் பிரகாரம், அத்தகைய முறைமையொன்றை மேற்கொண்ட போது லேடி றிட்ஜ்வே மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவை டிஜிட்டல் மயமாக்கும் செயற்திட்டத்தின் அவசியம் கணக்காய்வின் போது தெளிவாக சான்றளிக்கவில்லை. | மருத்துவ பதிவு முறைமை செயற்பட்டு வந்தது. | |
| (ii) | இந்த வெளிப்புற நோயாளர் பிரிவின் டிஜிட்டல் மயமாக்கலுக்காக சிங்கர் ஸ்ரீ லங்காவிடமிருந்து ரூபா 3 மில்லியன் கிரயத்தில் 29 குறோம் புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டதுடன் உருப்படி விபரக்குறிப்புடன் இணங்குகிறதா என்பதை சரிபார்ப்பதற்கு முறையான தரவுகள் மதிப்பீட்டு பொழிப்பில் சேர்க்கப்படவில்லை. இந்த உருப்படிக்கு 03 வருட உத்தரவாதக் காலம் தேவைப்படுகிறது என குறிப்பிடப்பட்ட போதிலும் அங்கே ஒரு வருட உத்தரவாதக் காலமே காணப்பட்டது. அதன் பிரகாரம், தயாரிக்கப்பட்ட விபரக்குறிப்பின் பிரகாரம் உருப்படி கொள்வனவு செய்யப்பட்டதா என்பது கணக்காய்வின் போது உறுதி செய்யப்படவில்லை. | மதிப்பீட்டு அறிக்கையில், சிங்கர் ஸ்ரீ லங்காவிடமிருந்து 29 எண்ணிக்கையிலான குறோம் புத்தக கணனிகளை கொள்வனவு செய்வதற்கு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரைத்திருந்தது. மதிப்பீட்டில், TEC உத்தரவாதக் காலத்தைக் கருத்தில் கொள்ளாமல் குறைந்தபட்ச விலையைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்திற்கு அதிகபட்ச காசு நலனை பெற்றுக்கொள்வதற்கு முடிவு எடுக்கப்பட்டிருந்தது. எனினும், குறித்த தீர்மானத்தில் எடுக்கப்பட்ட நடைமுறை மேற்படி வழிகாட்டலை மீறியுள்ளமை ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன், எதிர்காலத்தில் வழிகாட்டல்களை கடைப்பிடிப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | விபரக்குறிப்புக்களுடன் இணங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இரத்தினபுரி போதனா வைத்தியசாலையின் இ-சுகாதார வலையமைப்புக்கு ரூபா 25 மில்லியன் நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டு ஆரம்ப சுகாதார முறைமைகளை வலுப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 12.4 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. இரத்தினபுரி போதனா வைத்தியசாலை பணிப்பாளர் பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு (திட்டமிடல்) அனுப்பிய கடிதத்தின் பிரகாரம் வைத்தியசாலையின் OPD இற்காக செயற்பாட்டில் உள்ள வலையமைப்பு முறைமையை பூர்த்திசெய்வதற்கும் ஒரு கட்டத்திற்கு ரூபா 3.14 மில்லியன் கிரயத்தில் 03 கட்டங்களின் கீழ் சிகிச்சை நிலையத்தை இணைப்பதற்கும் ஸ்ரீ லங்கா ரெலிகொம்மிடம் இருந்து மதிப்பீடு பெறப்பட்டது. அந்த மதிப்பீட்டைப் புறக்கணித்து, செயற்திட்டமும் அமைச்சும் ஏற்கனவே இந்த பணிக்காக ரூபா 24.7 மில்லியனை செலுத்தியிருந்தது. எனினும் மருத்துவமனையின் அனைத்து சிகிச்சை நிலையங்களும் முழுமையாக மேவுகை செய்யப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | வெளிப்புற நோயாளர் பிரிவை வலையமைப்பு செய்வதற்காக ஸ்ரீ லங்கா ரெலிகொம்மிடம் இருந்து மதிப்பீடு பெறப்பட்டிருந்தது. எனினும், கிடைக்கும் நிதிகளைப் பயன்படுத்தி முழு மருத்துவமனையையும் வலையமைப்பு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. அதன் பிரகாரம் அனைத்து சிகிச்சை நிலையங்களும் தற்போது வலையமைப்பு செய்யப்பட்டு சீராக இயங்குகின்றன. | மிகவும் பொருத்தமான வாய்ப்பு தெரிவுசெய்யப்பட வேண்டும். |
| (உ) | இ-சுகாதார வலையமைப்பு முறைமையை வடிவமைத்து, வழங்கி, நிறுவுவதற்கு ரூபா 28.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் அதே செயற்திட்டத்தால் ”SWASTHA” முறைமைக்காக ரூபா 51 மில்லியன் தொகையும் செலுத்தப்பட்டது. ”SWASTHA” மற்றும் இ-சுகாதார வலையமைப்பு முறைமையால் மேவுகை செய்யப்பட்ட அதே நடவடிக்கைகளுக்காக ரூபா 79.3 மில்லியன் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ”SWASTHA” செயற்திட்டத்தின் கீழ் மருந்துக் களஞ்சியங்கள் மற்றும் மருந்தகம் மாத்திரமே முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளது, ஆனால் ”இ சுகாதார முறைமை” முறைமையின் கீழ் OPD, சிகிச்சை நிலையங்கள் மற்றும் வார்டுகளின் தரவுகள் நிகரமாக செயற்படுகின்றன. எனினும், ”SWASTHA மற்றும் HHIMS” இரண்டு முறைமைகளின் கீழும் தரவுகளை உள்ளிடலாம். | தேவைப்பாட்டிற்கு மிகவும் பொருத்தமானவை இனங்காணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மத்திய மாகாணத்தினால் பல்வேறு நடவடிக்கைகளுக்காக ரூபா 540.3 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது. எனினும், பெறுகைக் கோவைகள், பொருள் பெறுகைக் குறிப்புக்கள், பொருள் வழங்கல் குறிப்புக்கள், காசுப் புத்தகம், உறுதிப்படுத்தல் கடிதங்கள் மற்றும் நிர்மாண பெறுகைக் கோவைகள் என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் எதுவும் வழங்கப்படவில்லை. | ஒவ்வொரு கொடுக்கல்வாங்கலிற்கும் பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு தொடர்புடைய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (எ) | ஆரம்ப மீதியின் பிரகாரம் ரூபா 88.33 மில்லியன் மற்றும் மாகாண சுகாதார அமைச்சுக்களுக்காக பொது திறைசேரியால் விடுவிக்கப்பட்ட ரூபா 4,785 மில்லியன் கூட்டுமொத்தமான கட்டுநிதியில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய மாகாண அமைச்சுக்களால் ரூபா 4,782.43 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மாகாண சபைகளால் பேணப்பட்ட மாகாண நிதியக் கணக்கில் ரூபா 90.89 மில்லியன் கூட்டுமொத்தமான செலவிடப்படாத பணம் காணப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் குறித்துரைத்த நோக்கங்களுக்காக நிதிகள் பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| முதலமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட பொது வைப்புக் கணக்கில் உள்ள ரூபா 24.8 மில்லியன் காசு வைப்புக்கள் மற்றும் ரூபா 17.7 மில்லியன் காசுக் கொடுப்பனவுகள் தொடர்பான திகதிகள் தென் மாகாணத்தில் ஆரம்ப சுகாதார சேவை முறைமை வலுப்படுத்தல் செயற்திட்டத்திற்காக (PSSP) பெறப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்களின் கணக்கீட்டின் போது பதிவு செய்யப்படாததுடன் அந்த பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான தகவல்கள் காசுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படவில்லை. | ஆரம்ப சுகாதார சேவைகள் வலுவூட்டல் செயற்திட்டம் ஒரு பாதீட்டு ஆதரவு செயற்திட்டமாக உள்ளதால், தென் மாகாண முதலமைச்சு மற்றும் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் வருடாந்த நிதிக்கூற்று மூலம் மாகாணத் திறைசேரி வழங்கிய ஒதுக்கீடுகளின் கீழ் செயற்பட்டிருந்ததுடன் அதே நிறுவனம் சமமான உதவியுடன் சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க பேணப்படுகிறது. கணக்காய்வு அவதானிப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்ட தகவல்கள் இந்த பேரேடுகளில் பதிவு செய்யப்பட்டிருந்தன, மேலும் கணக்காய்வாளரிடம் சமர்ப்பிக்கப்பட்ட காசுப் புத்தகத்தில் பதிவுசெய்யப்படாத பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான பெறுமதிகள் சீர்செய்யப்படும் என்பதை தங்களுக்குத் தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதிப் பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்குதல் வேண்டும். |